**பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள்**

ந.க.எண் : 17530/கே3/2023, நாள் : 01.02.2024.

……………

பொருள் : பள்ளிக் கல்வித் துறை – விலையில்லா நலத்திட்டங்கள் – காலணிகள் (Footwear) மற்றும் காலேந்திகள் (Shoes) – மாணவ/மாணவியருக்கு பொருத்தமாக துல்லியமான அளவில் தயார் செய்து வழங்குதல் – பள்ளிதோறும் மாணவ/ மாணவியர் வாரியாக துல்லிய அளவு எடுத்து நலத்திட்டப் பொருட்களை வழங்குதல் – இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களை அளவு எடுக்கும் பணிக்கு உட்படுத்துதல் – கண்காணிக்கும் பொறுப்பு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் – ITK App-ன் வழியாக EMIS இணையதளத்தில் உள்ளீடு செய்தல் - அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : மதிப்புமிகு பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்கள் துறைத் தலைவர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகள், நாள் : 10.01.2024.

………………

தமிழ்நாடு அரசால் விலையில்லா நலத்திட்டங்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலணிகளாகவும் (Footwear) 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலேந்திகளாகவும் (Shoes) வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் காலணிகள் (Footwear) மற்றும் காலேந்திகள் (Shoes) மாணவர்களின் கால்களுக்கு மிக கச்சிதமாக பொருந்தும் வகையில் அளவெடுப்பதற்காக இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்களை பயன்படுத்த பார்வையில் காணும் அரசுச் செயலாளர் அவர்களின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. பள்ளி மாணவர்களின் கால் அளவுகளை எடுப்பதற்காக ITK தன்னார்வலர்களை உட்படுத்தி அளவுகளை துல்லியமாக எடுத்து அதன் விவரங்களின்படி விலையில்லா நலத்திட்டப் பொருள்களான காலணிகள் (Footwear) மற்றும் காலேந்திகள் (Shoes) உருவாக்குவதற்கு தேவையான அறிவுரைகளை மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தொடக்கக் கல்வி), வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்: அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தொடக்கக் கல்வி).